செ.வெ.எண்: 52 நாள்: 23.10.2021

## பத்திரிக்கைசெய்தி

தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள் மற்றும் தனிநபர் தொழில் முனைவோர்களுக்கு உதவிகள் மற்றும் சேவைகள் பெறுவதற்கு ஏதுவாக **ஓரிட வசதிமையம் (One Stop Facility Centre)**திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது. இம்மையத்தில் பணிபுரிய **தொழில் முனைவு மேம்பாட்டு அலுவலர் (Enterprise Development Officer)–**1 நபர், **தொழில் முனைவு நிதி அலுவலர் (Enterprise Finance Officer)–**1 நபர் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

தகுதியும், விருப்பமும் உள்ள நபர்கள் **(https://www.tnrtp.org) Website**ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டு விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 15.11.2021 மாலை 05.00 மணிக்குள் கீழ்கண்ட முகவரியில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது. ஆன்லைன் விண்ணப்பம் பதிவிறக்கம் தொடங்கும் தேதி 22.10.2021 விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி **மாவட்ட செயல் அலுவலர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், எண். 221 - இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம் - 611003** என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிட மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**